Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 191/2025** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **ஆனந்தகுமார்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**03.06.2026**
**முதல் விசாரணை**:

1. நான் பந்தல்குடியில் குடியிருந்து இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு நான் அருப்புக்கோட்டையில் இருந்து பந்தல்குடிக்கு இருசக்கர வாகனத்தில் நானும், ரமேஸ் என்பவரும் சென்று கொண்டிருந்தோம். அப்போது வாழ்வாங்கி பேருந்து நிறுத்தம் அருகே மதியம் 03.00 மணியளவில் சென்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியை பந்தல்குடி காவல் துறையினர் விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். என்ன விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்முன்பாக எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை. என்முன்பாக எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்துக்களை போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க செய்து கொடுத்தேன். அதில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.4 ஆகவும், அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து அசாஆ. 5 ஆகவும் குறியீடு**

**செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரிக்கவில்லை.**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறே சாட்சி பிறழ்சாட்சி என அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. கடந்த 17.04.2025 ம் தேதியன்று இரவு 08.00 மணியளவில் நானும், எனது ஊரை சேர்ந்த ரமேஷ் என்பவரும் அருப்புக்கோட்டைக்கு சென்று கொண்டிருந்தபோது வாழ்வாங்கி பஸ்ஸ்டாப் அருகே அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் ஆஜர் எதிரியான கௌதம் என்பவரை எங்கள் முன்னால் கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 20.30 மணிக்கு குற்ற செயலில் பயன்படுத்திய இருசக்கர வாகனம் மற்றும் கத்திரிகோல், பணம் ரூ. 1200/- ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**